# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

**இணைப்பு: 4**

## பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) மத்திய பிரிவிற்கும் (8-9 வயது), மேற்பிரிவிற்கும் (10-12 வயது), அதிமேற்பிரிவிற்கும் (13-17 வயது) பேச்சுகள் எம்மால் எழுதி வழங்கப்படும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் பேச்சினை மனனஞ் செய்து 5 நிமிடங்களுக்குள் பேச வேண்டும்.

2) இந்த மூன்று பிரிவுகளுக்குமான பேச்சுப் போட்டிகளும் மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடாத்தப்படும். மாநில மட்டத்தில் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் போட்டியாளர்கள் தேசியநிலைப் போட்டிக்கு அனுமதி பெறுவர்.

3) போட்டியாளரின் பேசும் திறன் பின்வரும் அம்சங்களில் கவனிக்கப்படும். **உச்சரிப்பு** (30%), **பொருளுணர்ந்து பேசுதல்** (25%), **சபைமரபும் ஆதிக்கமும்** (25%), **மனனஞ்செய்தல்** (20%), என்ற வகையாகக் கணிக்கப்படும்.

4) **உச்சரிப்புத் திறன்** (30 %)
- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
- தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent) அன்றாட பேச்சுத் தமிழ் அல்லாத பேச்சு
- சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)

5) **பொருள் உணர்ந்து பேசும் திறன்** (25%),
- பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
- ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்
- வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களில் தகுந்தவாறு கையாளுதல்
  (உ+ ம்: "அது எங்கே? " என்பதை "அது எங்கே" போலப் பேசுதல் ஆகாது)
- வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

6) **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (25%)
- நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பேச்சை ஆரம்பித்தல். ("தாரகை நடுவில் தண்மதி போல வீற்றிருக்கும் நடுவர்களே…" போன்ற மிகைப்படுத்தப்பட்ட வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் கிடையாது.)
- பேசும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்துப் பேசுதல்.(குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களையோ அல்லது நிலம், சுவர், கூரை முதலியவற்றையோ பார்த்தபடி பேசுவதை தவிர்த்தல்.)
- முக பாவனை: பேச்சின் பொருளை உணர்ந்து, இரசித்துப் பேசும் பாங்கு.

- தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல்.
  (மிக வேகமாகவோ, மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்.)

7) **மனனஞ் செய்யும் திறன்** (20%)
- வசனங்களையோ பந்திகளையோ தவறவிடாது பேச்சு முழுவதையும் கூறுதல்.
- எழுத்துப் பிரதியையோ, குறிப்புக்களையோ பார்த்து வாசித்தல் ஆகாது. அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- வசனத்தை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் பேச்சைத் தொடர்வதற்கு உதவி செய்யலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- சரளமான ஆற்றொழுக்கான பேச்சு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வசனத்தைத் தடுமாற்றம் காரணமாகத் திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)
- போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள் (பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது. அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

8) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**
- போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாகத் தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பாதுவிட்டாலோ அல்லது பிழையான தரவுகள் தரப்பட்டாலோ இப்போட்டியில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்படலாம் என்பதை அறியத்தருகின்றோம். இம்முறை எல்லாப் போட்டியாளர்களும் தமது பிறந்த திகதி, அவுஸ்திரேலியாவுக்கு, நியூசிலாந்திற்குக் குடியேறிய திகதி ஆகிய விபரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.
- போட்டிகளுக்கான பேச்சை எமது இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினை முன்கூட்டியே காண்பிக்கத் தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தை(ஒரு போட்டிக்கு $5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தைக் குறைக்கவும்.
- உங்கள் மின்னஞ்சல் விபரத்தையும், உங்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ளவேண்டின் நீங்கள் பெரிதும் விரும்பும் தொடர்பாடல் முறையையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.

9) மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

**தமிழ் ஊக்குவிப்புப் குழு**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**